செ.வெ.எண்.253 நாள்.09.09.2019

**பத்திரிக்கை செய்தி**

# காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் வளாகத்திலுள்ள மக்கள் நல்லுறவு கூட்ட அரங்கில் வாராந்திர மக்கள் குறைகேட்பு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைலமயில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 65 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.34,36,030 மதிப்பிலான விலையில்லா பெட்ரோல் ஸ்கூட்டரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் வளாகத்திலுள்ள மக்கள் நல்லுறவு கூட்ட அரங்கில் வாராந்திர மக்கள் குறைகேட்பு நாள் கூட்டம் இன்று (09.09.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு கோரிக்கை மனுக்களை பொதுமக்களிடமிருந்து பெற்றார்.

இக்கூட்டத்தில் முதியோர் ஒய்வூதிய தொகை, கல்வித்தொகை, வீட்டுமனை பட்டா, பசுமை வீடுகள், திருமண உதவித்தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம் ஆகிய பல கோரிக்கைகள் அடங்கிய 350த்திற்கும் மேற்பட்ட மனுக்கள் வரப்பெற்றன. அவை அனைத்தையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பரிந்துரைத்து மேல் நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் இரு கால்கள் பாதிக்கப்பட்டு இரு கைகளும் நல்ல நிலையிலுள்ள 65 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.34,36,030 மதிப்பிலான விலையில்லா இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். கொடி நாள் 2018 ஆண்டு நிதி வசூலாக காட்டாங்கொளத்தூரைச் சேர்ந்த திருமதி.V.T.லிமாரோஸ் அவர்கள் ரூ.10,25,000/– மதிப்பிலும், மதுராந்தகம் மாவட்ட கல்வி அலுவலர் திரு.ஜி.கிருஷ்ணன் அவர்கள் ரூ.2,00,000/– மதிப்பிலும், காஞ்சிபுரம் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.செந்தில்குமார் ரூ.1,15,000/– மதிப்பிலும், மதுராந்தகம் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.M.முரளி ரூ.1,00,000/–மதிப்பிலும், திருப்பெரும்புதூர் வட்டாட்சியர் திருமதி.காஞ்சனாமாலா ரூ.1,26,000/– மதிப்பிலும் என மொத்தம் ரூ.1,05,66,000/– மதிப்பிற்கான காசோலையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார்கள்.

மேலும்,முன்னாள் படைவீரர் நலத்துறை சார்பில் 2016ஆம் ஆண்டில் அதிகமான கொடி நாள் நிதி ரூ.5 இலட்சத்திற்கும் மேல் வசூல் புரிந்த 2 நபர்களுக்கு மேதகு ஆளுநர் அவர்களால் வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழ் மற்றும் வெள்ளி பதக்கங்களையும், ரூ.3 இலட்சத்திற்கும் மேல் கொடி நாள் நிதி வசூல் புரிந்த 7 நபர்களுக்கு தலைமை செயலர் அவர்களால் வழங்கப்பட்ட பாராட்டு சான்றிதழ் மற்றும் வெள்ளி பதக்கங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் சமூக பாதுகாப்பு திட்ட தனி துணை ஆட்சியர் திருமதி.மாலதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.மா.நாராயணன், முன்னாள் படைவீரர் நல அலுவலர் திருமதி.ரூபா சுப்புலட்சுமி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு. ஸ்ரீநாத் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் – காஞ்சிபுரம்.